# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் வேளாண்மை பெருகியுள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

- தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்
- பனை மேம்பாட்டு இயக்கம்
- தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி தொகுப்பு
- கறிவேப்பிலைத் தொகுப்பு
- தென்னை வேர்வாடல் நோய் மீட்புத் திட்டம்
- மிளகாய் மண்டலம் என்று ஏராளமான சிறப்புத் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்!

**உழவர்களுக்கான திட்டங்களை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்!**

அத்துடன், வேளாண் இயந்திரங்கள் பெறுவதற்கு மானியம் – வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க மானியம் – உழவர் செயலியில்

இவாடகை சேவை என்று நம்முடைய அரசின் முன்னெடுப்புகளையும் திட்டங்களையும் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்!

இந்த வரிசையில், உழைப்புக்கான பயனை உழவர்களே பெற வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டு, கடந்த கால ஆட்சியாளர்களால் சீரழிக்கப்பட்ட 125 உழவர் சந்தைகளை புதுப்பித்து, 14 புதிய உழவர் சந்தைகளையும் உருவாக்கியிருக்கிறோம்!

**ஈரோட்டில் மஞ்சள் ஆராய்ச்சி மையம்!**

இந்த ஈரோடு மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களின் நன்மைக்காக சில முக்கியமான திட்டங்களையும் முன்னெடுப்புகளையும் சொல்ல வேண்டும் என்றால், ஈரோட்டில்

- மஞ்சள் ஆராய்ச்சி மையம்
- 2020-21ஆம் ஆண்டை விட 25 ஆயிரம் ஏக்கர் கூடுதலாக 2024-25ஆம் ஆண்டில் தோட்டக்கலை பயிர்களில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- 8 ஆயிரத்து 579 விவசாயிகளுக்கு இலவச வேளாண் மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கிறது.
- பவானிசாகரில் உத்தமத் தியாகி ஐயா ஈஸ்வரன் அவர்களுக்கு திருவுருவச்சிலை மற்றும் அரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது.
- முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில், ஆயிரம் ரூபாயாக

## விவசாயிகளை தற்கொலைக்குத் தள்ளியது அ.தி.மு.க. ஆட்சி!

## மக்களை ஏமாற்றும் அ.தி.மு.க. தமிழ்நாட்டிலிருந்து சுத்தமாக களையப்பட வேண்டும்!

- இந்த மேற்கு மண்டல மக்களின் நீண்டகால கோரிக்கையான அத்திக்கடவு அவினாசி திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டு ஈரோடு திருப்பூர் கோவை மாவட்டங்களில் இருக்கும் ஆயிரத்து 45 ஏரிகள் மற்றும் குளங்கள் வளம் பெற்றிருக்கிறது.
- கடைமடைக்கும் பாசன நீர் கிடைக்கும் வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு, தேவையான புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- பவானி ஆற்றில் 8 தடுப்பணைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
- கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய்கள் 514 கோடி ரூபாயில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இருந்த முதியோர் ஓய்வூதிய தொகை 2023ஆம் ஆண்டு முதல் ஆயிரத்து 200 ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம். அதில், இந்த மாவட்டத்தில் மட்டும் 6 கோடியே 61 இலட்சம் ரூபாய் 5 ஆயிரத்து 696 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வளவும் ஈரோடு மாவட்ட விவசாய மக்களுக்காக செய்திருக்கிறோம். இனியும் செய்து தர இருக்கிறோம்.

**உழவுத் தொழிலுக்கு நாம் ஊக்கம் அளிப்போம்!**

அந்த வரிசையில்தான் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான அனைத்து தகவல்களையும் நீங்கள் இங்கு தெரிந்துகொள்ளலாம். உழவுத் தொழிலுக்கும் வேளாண்மை சார்ந்து இருக்கும் அனைத்துத் தரப்பினருக்கும், நாம் எல்லோரும் ஒன்றிணைந்து ஊக்கமளிக்க வேண்டும் என்று இந்த நிகழ்ச்சி வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

இப்படியான பயனுள்ள நிகழ்வுகள் அனைத்து மண்டலங்களிலும் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று வேளாண்மை உழவர் நலத்துறையை நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்! அதேபோல், விவசாயிகளும், பொதுமக்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்!

**பயிர்களுக்கு நடுவில் முளைக்கும் களையாக இருந்த அ.தி.மு.க. ஆட்சி!**

உழவு என்பது தொழில் மட்டுமல்ல; அது நம்முடைய பண்பாடு! நிலத்தை ஐந்திணையாக பிரித்து வாழ்வியல் வகுத்த இனம் நம்முடைய தமிழினம். அந்த நிலத்தை எல்லா வகையிலும் நாம் வளப்படுத்தி உயர்த்த வேண்டும். வளமான நிலங்களிலும், பயிர்களுக்கு நடுவில் களைகள் முளைக்கும் என்பது விவசாயிகளான உங்களுக்கு நன்றாகத் தெரியும்!

அப்படிப்பட்ட களையாக தான் கடந்த அ.தி.மு.க. ஆட்சி இருந்தது! எல்லா வகையிலும் விவசாயிகளுக்கு துரோகம் செய்த ஆட்சி அது! ஒவ்வொரு விஷயத்திற்கும் நீங்கள் எப்படியெல்லாம் போராடினீர்கள் என்று சிறிது நினைத்துப் பாருங்கள்... இன்றைக்கு அந்த நிலைமை மாறியிருக்கிறது! கடந்த ஆட்சியில், விவசாயிகளின் தற்கொலை அதிகமானது! உழவர்களின் உரிமையைப் பறிக்க முயன்ற மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து, டெல்லியில் வெயிலிலும், மழையிலும் விவசாயிகள் போராடி அடக்குமுறையை எதிர் கொண்டபோது, கூச்சமே இல்லாமல் அந்த சட்டங்களை ஆதரித்துப் பேசி, பச்சை துரோகம் செய்தவர்கள் அவர்கள். அதனால் தான் நீங்கள் தோற்கடித்தீர்கள்!

**மீண்டும் அமையப் போவது நமது திராவிட மாடல் ஆட்சிதான்!**

வேளாண் பெருங்குடி மக்களான உங்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அதுபோன்ற களைகள், நாட்டிலிருந்து மொத்தமாக களையப்பட வேண்டும். உழவர் பெருங்குடி மக்களான உங்களுக்கு இன்னும் பல திட்டங்கள் திராவிட மாடல் ஆட்சியில் வர இருக்கிறது. மீண்டும் நம்முடைய திராவிட மாடல் 2.0 ஆட்சிதான் அமையும்! அதற்கு, உழவர்களைக் காக்கும் இந்த அரசுக்கு உழவர் பெருமக்கள் அனைவரும் உற்ற துணையாக இருக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### சிவகங்கை – கிருஷ்ணகிரி – நாகை – கரூர் மாவட்டங்களில்

# நான்கு வேளாண் கல்லூரிகளில் 1013 மாணவர்கள் சேர்க்கை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!



சென்னை, ஜூன் 12 -

சிவகங்கை, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், கரூர் மாவட்டங்களில் வேளாண், தோட்டக்கலை கல்லூரிகள் அமைக்கப்பட்டு இக்கல்லூரிகளில் 1013 மாணவர்கள் சேர்க்கப்பட்டு எவ்வித இடையூறுமின்றி பயின்று வருகின்றனர் என்று வேளாண் - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வேளாண்மை - உழவர்நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களின் பேராதரவுடன் மே 2021 இல் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற உடன் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையினை சட்டமன்றத்தில் தாக்கல் செய்து பல அரிய திட்டங்களின் மூலம் விவசாயிகளின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்தி உள்ளார். திராவிட மாடல் அரசின் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு இதுவரையில் ஐந்து வேளாண் நிதிநிலை அறிக்கையின் மூலம் ரூபாய் 1,94,076/ கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு உழவர்கள் நலன் காக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்புகளால் முந்தைய ஆட்சி காலத்தில் 10 ஆண்டுகளில் 2012 - 2013 முதல் 2020 - 2021 வரை சராசரியாக 1.36% இருந்த வேளாண் வளர்ச்சி 2021 முதல் 2024 வரை சராசரியாக 5.66 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்தது.

மே 2021 இல் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றவுடன் கிருஷ்ணகிரி மாவட்டம் பையூரில் ஒரு தோட்டக்கலை கல்லூரியும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், கரூர் மாவட்டத்தில் கரூர், சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு ஆகிய இடங்களில் தலா ஒரு வேளாண்மை கல்லூரியும் அமைக்க உத்தரவிடப்பட்டு அவ்வாறே 2021-22 ஆம் ஆண்டிலிருந்து மாணவர்கள் சேர்க்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவை ஏற்கனவே உள்ள கட்டிடங்களில் சிறப்பாக இயங்கி வருகின்றன.

**வேளாண் – தோட்டக்கலை கல்லூரிகள்**

வேளாண்மை, தோட்டக்கலை கல்லூரிகள் அமைக்க இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் (Indian Council of Agricultural Research - ICAR) தர நிர்ணயத்தின்படி குறைந்தபட்சம் 40 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடங்களை தேர்வு செய்யும் பணி உடனடியாக தொடங்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டில் உள்ள மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலேயே செட்டிநாடு வேளாண்மை கல்லூரிக்கு என இடம் தேர்வு செய்யப்பட்டது. நபார்டு வங்கியின் நிதி உதவி மூலம் ரூபாய் 61.79 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு கட்டுமான பணிகள் முடியும் தருவாயில் உள்ளன விரைவில் கல்லூரிக்கான கட்டடம் முதலமைச்சர் அவர்களால் மாணவர்கள் பயன்பாட்டிற்கென வெகுவிரைவில் திறந்து வைக்கப்பட உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூரில் தோட்டக்கலை கல்லூரி அமைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ரூபாய் 70.18 கோடிக்கானப் பணிகள் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு இதுவரை சுமார் 35 சதவீத பணிகள் முடிவடைந்து தொடர்ந்து பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ் வேளூரில் வடக்கு வெளி கிராமத்தில் 40 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு விட்டது. உரிய அரசாணை பெறப்பட்டு கட்டமைப்பு பணிகள் விரைவில் தொடங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம் வட்டம், மணவாசி வருவாய் கிராமத்தில் வேளாண்மை கல்லூரிக்கு என 40 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு கல்லூரிக்கு தேவையான கட்டிடங்கள் கட்ட ரூ.76.62 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

**மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள்!**

இதற்கிடையில் கடந்த நான்கு ஆண்டுகளில் இக்கல்லூரிகளில் இதுவரை 1013 மாணவர்கள் சேர்க்கப்பட்டு பயின்று வருகின்றனர். அவர்கள் படிப்பிற்கு எந்தவித இடையூறும் இன்றி அனைத்து அடிப்படை வசதிகளும் கல்லூரிகளில் படித்து வரும் மாணவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ளன. மேலும் 2021 இல் திராவிட முன்னேற்ற கழக திராவிட மாடல் அரசினால் தமிழ்நாடானது உயர்கல்வியினை மாணவர்களுக்கு வழங்குவதில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது. உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு, நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ் புதல்வன் திட்டம் மூலம் மாணவர்கள் தங்கு தடையின்றி கல்வி பயின்று வருகின்றனர். மாணவர்கள் அடிப்படை வாழ்வாதாரம் சிறப்பாக திகழ்கின்றது.

இவ்வாறு இருக்கையில் புதிய வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை என்று எதிர்க்கட்சியின் குறிப்பாக அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக சிறப்பாக ஆட்சி செய்து வரும் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியின் மீது குறை கூறுவதையே வாடிக்கையாக கொண்டுள்ளார் எதிர்க்கட்சி தலைவர் அவர்கள். அவருடைய குற்றச்சாட்டு அனைத்தும் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் மட்டுமே இருக்குமே இன்றி வேறு எதுவும் இல்லை என்று திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு

# கடலில் மீன் படகுகளைக் கொண்டு உதயசூரியன் சின்னம்!

## நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பார்வையிட்டார்!

நாகை, ஜூன்.12-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-ஆவது பிறந்த நாள் - செம்மொழி நாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலில் மீன் படகுகளைக் கொண்டு உதயசூரியன் சின்னம்!

நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பார்வையிட்டார்!

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாட்டில் முதன் முதலில் மீனவர்களுக்கு கான்கிரீட் இலவச வீடு வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழைப் போற்றும் வகையில் 2026 சட்ட மன்ற தேர்தலில் மீண்டும் வெற்றி வாகை சூட உள்ள சின்னமான உதயசூரியன் சின்னத்தை கடலில் படகுகளை கொண்டு உருவாக்கப்பட்டு பொதுமக்களுக்கு காட்சிபடுத்தப்பட்டது.

இதையடுத்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் கடலுக்கு சென்று மீன் பிடி படகுகள் கொண்டு உருவாக்கப்பட்ட உதயசூரியன் சின்னத்தை பார்வையிட்டார். நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. ராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், நாகை வடக்கு ஒன்றியச் செயலாளர் சிக்கல் என்.ஆனந்த், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பாலமுரளி, மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் என். மோகன்தாஸ் மற்றும் மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள், உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். பின்னர் செய்தியாளர்களுக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கூறுகையில் கடற்கரையில் வாழழும் மீனவர்களுக்கு முதன் முதலில் இலவச கான்கிரீட் வீடு பூம்புகாரில் தான் கட்டி கொடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவர். இலவச கான்கிரிட் வீடு கட்டிக் கொடுத்த தலைவர் கலைஞர் என்பதை நினைவு படுத்தும் வகையில் மீனவர்களால் மீன் பிடி படகுகளை கொண்டு கழகத்தின் வெற்றிச் சின்னம் உதயசூரியனை உருவாக்கப்பட்டது. கலைஞர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த மீன் பிடி தடைகாலத்தை உதவித் தொகை உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை கலைஞர் கொண்டு வந்தார். நாகை அக்கரைப்பேட்டையில் ரூ. 81 கோடிக்கு மீன் இரங்கு தள விரிவா திட்டத்தை அறிவித்து தற்போது பணிகளை நிறைவு பெறும் வகையில் உள்ளது. மீன் பிடி தடைகாலத்தில் நிவாரண தொகை அறிவித்தவர் கலைஞர் அவர்கள் தான். மீனவர்களுக்கு நலவாரியமும், மீன் வளர்ச்சி கழகத்தை கொண்டு வந்த தலைவரின் புகழை கொண்டாடும் வகையில் கழகத்தின் வெற்றி சின்னமான உதயசூரியரை கடலில் வடிவமைக்கப்பட்டது. கடலில் வடிவமைத்த மீனவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.




கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கலையரங்கத்தில் நடைபெற்ற முதல் பட்டமளிப்பு விழாவில் மாணவ, மாணவியருக்கு மருத்துவப் பட்டங்களை மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன், கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., வழங்கினர். கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், கரூர் தொகுதி எம்.பி.செ.ஜோதிமணி, எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் லோகநாயகி, மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன் ஆகியோர் அருகில் உள்ளனர்.



கோவை அவினாசி சாலையில் நடைபெற்று வரும் உயர்மட்ட மேம்பாலப் பணிகளை நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.